G.O. No. 17 — 7th Pay Commission Clarification

Pension means pension, whether contributory or not, of any kind whatsoever payable to or in respect of any person, and includes retired pay so payable, a gratuity so payable and any sums so payable by way of the return, with or without interest thereon, or any other addition thereto of subscriptions to provident fund.

ஓய்வூதியம் குறித்து மத்திய அரசின் 7வது ஊதியக்குழு அறிக்கையின் விளக்கம்

ஒருவர் அல்லது அவர் சார்பாக, ஓய்வூதிய நிதி மற்றும் பங்களிப்புத் தொகை திரும்ப வழங்கியோ அல்லது பிற வகையிலோ பணிய்க்கொடை உள்ளிட்ட எந்த நிதியும் வட்டியின்றியோ அரசின்மிருந்து தொடர்ந்து பெறும் நிதி ஓய்வூதியம் ஆகும். உச்சநீதிமன்ற தீர்ப்பின் விளக்கம்:

> **D.S. Nagar and others vs Union Government of India (AIR 1983 SC 130)** ஓய்வூதியம் அவர் ஓய்வு பெறுவதற்கு முன்பு சுயமரியாதையுடன் வாழ தனது தேவைகளை எந்த அளவில் பெற்றாரோ அதே அளவில் ஓய்வுக்குப் பின்னர் எவரையும் சார்ந்து இல்லாத வகையில் பெற வேண்டும். ஓய்வூதியம் என்பது அரசின் பரிசோதனை கருணைத் தொகையோ அல்ல, அதுகடந்த கால பணிகளுக்கான உரிமை ஆகும்.

ஓய்வூதிய துவக்கம் இந்தியாவில் காலனி ஆட்சியில் ஓய்வூதியச் சட்டம் 1871இல் தொடங்கி சில பிரிவினருக்கு மட்டும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. மத்திய-மாநில அரசுகளின் முதல் ஊதியக்குழு பரிந்துரைகளின் படி 1960 முதல் ஓய்வூதிய விதிகள் உருவாக்கப்பட்டன. 01.01.1979 முதல் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978-ன்படி ஓய்வூதியம் வழங்குதல் பரவலாக்கப்பட்டது (அரசாணை எண்: 1426 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள் 29.12.1978).

தமிழகத்தில் ஓய்வூதியர்கள் எண்ணிக்கை (31.05.2024ம் நாளில்)

- மாநில சிவில் ஓய்வூதியர்கள் : 3,90,862
- ஆசிரியர் ஓய்வூதியர்கள் : 63,980
- சிவில் குடும்ப ஓய்வூதியர்கள் : 2,32,472
- ஆசிரியர் குடும்ப ஓய்வூதியர்கள் : 25,843
- பிறவகையில் (கருணை ஓய்வூதியர்கள்
- 1/3 தொகுப்பு ஓய்வூதியர்கள் உள்ளிட்டவை) : 15,242
- உயர்நீதிமன்ற நீதிபதிகள் : 3,860
- பணி ஓய்வூதியர்கள் : 171
- குடும்ப ஓய்வூதியர்கள் : 78
- **மொத்தம் :** 7,32,508

கூடுதல் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் (31.06.2026 நாளில்)

- 80 வயதினர் : 59,542
- 85 வயதினர் : 28,582
- 95 வயதினர் : 7,304

- 100 வயதுக்கு மேற்பட்டோர் : 108
- **மொத்தம்** : 95,536

ஓய்வூதிய வகைப்பாடுகள்:

1. வயது முதிர்வு ஓய்வூதியம் (Superannuation Pension)
2. தன்விருப்ப ஓய்வூதியம் (Voluntary Retirement)
3. கட்டாய ஓய்வூதியம் (Compulsory Retirement)
4. இயலாமை ஓய்வூதியம் (Invalid Pension)
5. ஈடுசெய்யும் ஓய்வூதியம் (Compensation Pension)
6. கருணை ஓய்வூதியம் (Compensation Allowance)
7. குடும்ப ஓய்வூதியம் (Family Pension)

1. **வயது முதிர்வு ஓய்வூதியம்** : Superannuation Pension ஓய்வூதிய விதி எண்: 32 மற்றும் அடிப்படை விதி 56 (i). நிர்ணயிக்கப்பட்ட ஓய்வுபெறும் வயதில், ஓய்வு பெறுபவர்களுக்கு வழங்கப்படுவது இவ்வகை ஓய்வூதியம். முன்பு உயர்நிலை அலுவலர்களுக்கு ஓய்வுபெறும் வயது 58 (30.04.2020 வரை; 1.4.76க்கு முன்பு 55). அடிப்படை ஊழியர்களுக்கு (அலுவலக உதவியாளர்கள்) ஓய்வுபெறும் வயது 60 ஆகும். 2020ஆம் ஆண்டில் ஓய்வுபெறும் உயர்நிலை அலுவலர்களுக்கு 31.05.2020 முதல் ஓய்வு பெறும் வயது 58லிருந்து 59ஆக உயர்த்தப்பட்டது. அரசாணை எண் : 51 பணியாளர் நி.சீ.த்துறை நாள் : 25.02.2021. மேற்குறிப்பிட்ட பணிஓய்வு வயது உயர்வுக்கான விதித்திருத்தம் (FR 56 sub rule (1) clause (a) அரசாணை எண் : 62 ப & நி.சீ (FR II) துறை நாள் : 01.06.2020இல் மற்றும் அ.ஆ.எண் : 92 மனித வள மேலாண்மைத்துறை (FR II) நாள் : 13.09.2021இல் பிறப்பிக்கப்பட்டுள்ளது).

ஓய்வூதியம் பெற குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணி முடித்திருக்க வேண்டும் (20 அரை ஆண்டுகள் - 9 ஆண்டுகள் + 9 மாதங்கள் பணியாற்றினாலும் பத்தாண்டுகளாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்). குற்றச்சாட்டுகளின் மீது தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட அரசு ஊழியருக்கு பணி ஓய்வு பெற அனுமதிக்கப்படாமல், குற்றச்சாட்டுகளின் மீது இறுதி ஆணை பிறப்பிக்கப்படும்வரை (Note under TNP Rule 32) தற்காலிக ஓய்வூதியத்திற்கு மிகாமல் பிழைப்பூதியம் வழங்கப்படும்.

2. **தன் விருப்ப ஓய்வூதியம் - (Voluntary Retiring Pension)** ஓ.வி.42 மற்றும் அ.வி 56(3) (A). 20 ஆண்டு பணி முடித்தவர் அல்லது 50 வயது நிறைவு செய்தோர் விருப்ப ஓய்வில் செல்லலாம். ஒருவர் 20 ஆண்டு காலம் பணி செய்த பிறகு விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றால், 5 ஆண்டு பணிக்காலம் கூடுதலாகக் கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கப்படும். அடிப்படை விதி 56 (3) ன்படி தன் விருப்ப ஓய்வு பெறும் அரசு ஊழியருக்கு அவரது தகுதி பெறும் பணி காலத்துடன் அதிக பட்சம் 5 ஆண்டுகள் சிறப்பு உயர்வு (Weightage) வழங்கி அதன் பின்னர் உள்ள மொத்த தகுதி பெறும் பணிக்காலத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படும். இந்த சிறப்பு உயர்வு ஓய்வூதியம் பெற தகுதி பெறும் பணிக்காலம் கணக்கிடுவதற்கு மட்டுமே. இதன்அடிப்படையில் கருத்தியலான ஊதிய உயர்வு எதுவும் வழங்கப்பட மாட்டாது. 5 ஆண்டுகள் சிறப்பு உயர்வையும்

சேர்த்து கணக்கிடப்படும் பணிக்காலம் 30 ஆண்டுகள் தகுதி பெறும் பணி காலத்திற்கும் மிகாமலும் வயது முதிர்வில் ஓய்வு பெறும் வயதான 60 ஆண்டுகளை கடக்காமலும் இருக்க வேண்டும். (அ.வி.56 (3) (D) (1) மற்றும் அரசாணை எண்.376 ப மனுச நாள் 11.12.95)

3. **கட்டாய ஓய்வூதியம் (Compulsory Retirement Pension)** ஓ.வி.39 மற்றும் அ.வி.56 (2). அடிப்படை விதிகள் 56 D-ன் படி, பொதுநலன் கருதியோ அல்லது ஒரு ஊழியர் மீதான குற்றச்சாட்டுகளின் காரணமாகவோ மூன்று மாத நோட்டீஸ் அனுப்பி அல்லது மூன்று மாத ஊதியம் வழங்கி கட்டாயமாக ஓய்வு அளித்து, வழங்கப்படுவது கட்டாய ஓய்வூதியம் ஆகும். ஒழுங்கு நடவடிக்கையில் தண்டனையாக கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டவர்களுக்கும் இவ்வகை ஓய்வூதியம் வழங்கப்படும். ஓய்வூதியத்துடன் பணிக்கொடையும் வழங்கப்படும். அதிகாரம் பெற்ற உரிய அலுவலரால் ஓய்வூதியம் (அ) பணிக்கொடை இரண்டையும் குறைத்து வழங்கலாம். அதற்கு முன்பு தமிழ்நாடு தேர்வாயத்தின் இசைவு பெற வேண்டும்.

4. **இயலாமை ஓய்வூதியம் : Invalid Pension** ஓ.வி.எண்.36. உடல் நலமின்மை காரணமாக மருத்துவக் குழுவினரால் பணிக்குத் தகுதியில்லை என பரிந்துரை செய்யப்பட்ட ஒருவர் ஓய்வுபெற்றால் Invalid Pension வழங்கப்படும். அரசு ஊழியர் தாமே, தனக்கு இயலாமை காரணமாக ஓய்வளிக்குமாறு உரிய அலுவலரிடம் மனு அளிக்கலாம். இயலாமை ஓய்வூதியம் பெற அளிக்கப்படும் மருத்துவச் சான்று முழு விவரங்களுடன் இருக்க வேண்டும். இயலாமை ஓய்வூதியம் பெறுபவருக்கு அனைத்து ஓய்வூதியப் பலன்களும் கிடைக்கும் (கம்யூட்டேஷன் கிடையாது). பணிக்காலம் மட்டுமே ஓய்வூதியக் கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். 53 வயதுக்குள் இயலாமை ஓய்வூதியம் பெறுபவர்களின் தகுதிவாய்ந்த வாரிசுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு கிடைக்கும் (அரசாணை எண்.10 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (ஜி) துறை நாள் : 13.02.2009). தற்போது ஓய்வுபெறும் வயதை 59 ஆக உயர்த்தியதால் 54 வயதுக்குள் ... என்று திருத்தப்படவேண்டும்.

5. **ஈடுசெய்யும் ஓய்வூதியம் : (Compensation Pension)** ஓ.வி.எண் : 38. ஒரு பதவி ஒழிக்கப்பட்டு ஒரு பணியாளர் வேலையிலிருந்து நீக்கப்படுகையில் (Discharged) அவர் ஓய்வுபெற விருப்பம் தெரிவித்தால் இந்த ஓய்வூதியம் வழங்கப்படும். அவர் வேறொரு ஓய்வூதியமில்லாத பணிக்கு அமர்த்தப்பட்டால் அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகே ஈடுசெய்யும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

6. **கருணைப்படி : (Compensation Allowance)** ஓ.வி.எண். : 40. அரசுத்துறை மற்றும் முன்னாள் மாவட்ட கழக (District Board) ஊழியர்கள்-தொகை செலுத்தி ஓய்வுநல நிதித்திட்டத்தில் (CPF) இருந்தவர்கள் / ஓய்வூதியம் இல்லா பதவிகளிலும் பணியாற்றி 1.1.86க்கு முன் ஓய்வுபெற்றவர்கள், இறந்தவர்கள் குடும்பத்தினருக்கு கருணை ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அடிப்படை கருணை ஓய்வூதியம் 1997 முதல் ரூ.605, 4.6.2013 முதல் ரூபாய் 645 அகவிலைப்படியுடன் வழங்கப்படுகிறது.

II. **குடும்ப ஓய்வூதியம் (Family Pension)** ஓய்வூதிய விதி எண் : 49. அரசு ஊழியர் பணிக்காலத்தில் அல்லது ஓய்வுபெற்ற பிறகு இறந்தால் அவரது மனைவி / கணவருக்கு / உரிய வாரிசுதாரருக்கு வழங்கப்படுவது குடும்ப ஓய்வூதியம் ஆகும். அரசாணை எண். 950 நிதித் (பென்ஷன்) துறை நாள் : 29.7.64-ன் படி 1.4.64க்குப் பின் பணியில் இருப்போர் / ஓய்வுபெற்றோர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டது. 1.4.64க்கு முன் இறந்தவர்களின்

குடும்பங்களுக்கும் 1.4.76 முதல் குடும்ப ஓய்வூதியம் விரிவாக்கப்பட்டது. மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படியும் அ.ஆ.எண்.768 நிதி (பிII) நாள் 27.8.86ன் படியும் பல்வேறு விகிதங்களின்படி வழங்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 1.4.1979 முதல் அரசு அலுவலர்கள் கடைசியாக வாங்கிய ஊதியத்தில் 30 சதவீதம் என்ற அளவிற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அரசுப்பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50% அளவுக்கு (Enhanced Family Pension) 7 ஆண்டுகளுக்கு அல்லது அவருக்கு 65 வயது நிரம்பும் நாள்வரை எது முன்போ அதுவரை கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும் (TNP Rule 49 (3)). பின்னர் 30% அளவுக்கு (Normal Family Pension) வழங்கப்படும். 01.01.2016 முதல் திருத்திய ஓய்வூதிய அரசாணை எண் : 313 (பத்தி 17)ன்படி கூடுதல் குடும்ப ஓய்வூதியம் பெறும் காலம் 7 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த பலன் 1.1.2016இல் (அல்லது) அதற்குப் பிறகு ஓய்வுபெறும் / பணிக்காலத்தில் இறக்கும் அரசு ஊழியர்களின் குடும்பத்தினருக்கு மட்டுமே பொருந்தும். மேற்குறிப்பிட்ட அரசாணை பத்தி 19ன்படி குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் பணி முடித்து இறந்த அரசு ஊழியரின் குடும்பத்திற்கு அவர் பெற்ற அடிப்படை ஊதியத்தில் 50 சதவீதம் அளவுக்கு கூடுதல் குடும்ப ஓய்வூதியம் 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இறந்த அரசு ஊழியருக்கு 65 வயது முடியும் நாள் வரை மட்டுமே கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். பணிக்காலத்தில் இறக்கும் அரசு ஊழியர் தொடர்ந்து ஓராண்டு பணிமுடித்திருக்க வேண்டும். இருப்பினும் முறையான பணி நியமனத்தின் போது உடல்தகுதி சான்று சமர்ப்பித்திருந்தால், ஓராண்டு பணிக்குள் இறந்தாலும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும் (அரசாணை எண்.967/நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 29.8.89). தற்காலிகப் பணியாளர்கள் ஓராண்டு காலம் பணி முடித்திருக்க வேண்டும். பணி முறிவு இருந்தாலும் மொத்தத்தில் ஓராண்டு பணியாற்றியிருந்தால் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதி உண்டு.

கீழ்கண்டவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதி உடையவர்கள்:

- கணவர் / மனைவி (வாழ்நாள் வரை / மறுமணம் செய்து கொண்டால் கிடையாது)
- மகன் / மகள் / வளர்ப்பு மகள்
- விவாகரத்து செய்யப்பட்டவர் மூலம் பிறந்த குழந்தைகள்
- விதவை மகள் / தத்தெடுக்கப்பட்ட விதவை வளர்ப்பு மகள்
- 25 வயதாகும் வரை, பெண்களுக்கு அதற்கு முன் திருமணமானால் அந்த தேதி வரை.

25 வயதுக்குள் குழந்தைகள் ஒன்றுக்கு மேற்பட்டு இருந்தால் மூத்த குழந்தைக்கு 25 வயதான பின் அடுத்த குழந்தைகளுக்கும் அதற்கும் 25 வயதான பின் அதற்கடுத்த குழந்தைகளுக்கும் வரிசைப்படி குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். இரட்டைக் குழந்தைகளாக இருந்தால் சமமாக பிரித்து வழங்கப்படும்.

முதல் மனைவிக்கு 25 வயதுக்குள் மகன் / மகள் இருந்தால் தகுதி உள்ள மகன் / மகள், இரண்டாவது மனைவி ஆகியோருக்கு குடும்ப ஓய்வூதியம் பிரித்து தரப்படும். ஆனால், இரண்டாவது மனைவியின் திருமணம் சட்டப்படி நடந்திருக்க வேண்டும். இந்நேர்வில் முதல் மனைவியின் மகன் / மகள் 25 வயது அடைந்த பின்பு இரண்டாவது மனைவிக்கு முழு குடும்ப ஓய்வூதியம் கிடைக்கும் (TNP Rule 49 -7). ஒருவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தால் சட்டப்படியான முதல் மனைவிக்கு மட்டுமே குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். இரண்டாவது

மனைவிக்கு உரிமை இல்லை.

ஓய்வூதியர் பணி ஓய்வு பெற்ற பின்னர் திருமணம் (சட்டப்படி) செய்து கொண்டால், அவர் பணிபுரிந்த அலுவலகம் மூலமாக திருமண பதிவுச்சான்றுடன் விவரங்களை அனுப்பவேண்டும். மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பு செய்து மாநிலக் கணக்காயரால் புதிய ஓய்வூதிய ஆணை பிறப்பிக்கப்படும் (அரசாணை எண்.569 நிதித்துறை நாள் : 08.02.1991 மற்றும் 598 நிதித்துறை நாள் : 27.09.2003).

ஒருவர் சட்டவிரோதமாக திருமணம் செய்து அல்லது திருமணம் செய்து கொள்ளாமல் குழந்தை பெற்றுக் கொண்டால் சட்டவிரோத மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் கிடையாது. ஆனால் குழந்தைக்கு தகுதி உண்டு (அரசாணை எண்.602 நிதித்துறை நாள் : 13.09.96).

கல்யாணமாகாத அரசு ஊழியரானால்:

- தகப்பனார்
- தாய் / மாற்றாந்தாய்
- கல்யாணமாகாத 25 வயதிற்குட்பட்ட சகோதரன்
- கல்யாணமாகாத 25 வயதிற்குட்பட்ட சகோதரி
- 25 வயதிற்குட்பட்ட விதவை சகோதரி ஆகியோர் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்களாவர்.

ஓய்வூதியக் கொடுவை ஆணையில் (PPO) ஓய்வூதியமும் குடும்ப ஓய்வூதியமும் (Joint PPO) அங்கீகரிக்கப்படுகிறது. அதனால் ஓய்வூதியர் இறந்தால் இணையர் குடும்ப ஓய்வூதியம் பெற வாரிசுச் சான்றிதழ் தேவையில்லை. இறப்புச் சான்றுடன் படிவம்-14 (தற்போது படிவம்-17) மற்றும் சான்றுகளை அளித்தல் போதுமானது (அரசாணை எண்.31 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள் 09.01.1996. ஓய்வூதியக் கொடுவை ஆணையில் (PPO) இணையர் பெயர் விடுபட்டிருந்தால், பணிபுரிந்த அலுவலகம் மூலம் உரிய ஆவணங்களுடன் மாநிலக் கணக்காயருக்கு விண்ணப்பித்து, குடும்ப ஓய்வூதிய புதிய அங்கீகார ஆணை பெற வேண்டும்.

மாற்றுத்திறனாளியாகவுள்ள மகன்/மகளுக்கு குடும்ப ஓய்வூதியம்: உடல் ஊனமுற்ற/மனவளர்ச்சியில்லாத குழந்தைகள் இருப்பின் அவர்களுக்கு, ஓய்வூதியம் /குடும்ப ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறும் பெற்றோர் இறந்தபின் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் கிடைக்கும். திருமணமான மகனுக்கும் இவ்வகை குடும்ப ஓய்வூதியம் உண்டு. இவர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் Enhanced and Normal Rate-ன் படி வழங்கப்படும். மாற்றுத்திறனாளியாக மனவளர்ச்சியில்லாத மகன், மகள் அவர்கள் வாழ்வதற்கு சம்பாதிப்பதற்கு இயலாத அளவில் குறைபாடு உள்ளவர் என்பதற்கான சான்றை சிவில் சர்ஜன் தகுதிக்கு குறையாத மருத்துவ அலுவலரிடமிருந்து பெறப்படவேண்டும்.

இவ்வகை ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு பாதுகாவலரை அரசு ஊழியர் / ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் நியமனம் செய்யலாம். இந்த ஓய்வூதியத்திற்கு உரிய குழந்தைகளின் பாதுகாவலர், துறை அலுவலர் மூலம் மாநிலக் கணக்காயருக்கு மனு அளித்து புதிய ஓய்வூதிய ஆணை பெறப்படவேண்டும்.

காணாமல் போன அரசு ஊழியர்/ஓய்வூதியர் குடும்பத்தினருக்கு ஓய்வூதியம்: காணாமல் போனவரைப் பற்றி சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும். இணையர் / வாரிசுதாரர் முதல் அறிக்கை (FIR) பெற்று பணி புரிந்த அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.

அலுவலக நடைமுறைகளை முடித்து உடனடியாக காணாமல் போன ஊழியரின் பணிக்கால ஊதியம், பொது ஓய்வுநல நிதித் தொகை, கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு உட்பட / விடுப்பு ஊதியம் சிறப்பு ஓய்வுநல நிதித்தொகை ஆகியவை வழங்கப்படும்.

எல்லா முயற்சிகள் எடுத்தும் காணாமல் போனவரைப் பற்றி தகவல் கிடைக்கவில்லை என்று அந்தக்காவல்நிலைய அதிகாரியிடமிருந்து அறிக்கை பெற வேண்டும். காணாமற் போனது குறித்து காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழிந்தபின் குடும்ப ஓய்வூதியம் / பணிக்கொடை வழங்கப்படும் (அரசாணை எண்.448 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 12.10.99). சட்ட அடிப்படையில் வாரிசு சான்று பெறவேண்டும் (அரசு க.எண்.11492 / நிதித் (ஓய்வூதிய) துறை / 87-1 நாள் :04.04.88). பெற்றத் தொகையினை (காணாமல் போனவர் நேரில் வந்து கேட்பு செய்யும் போது) திரும்பச் செலுத்திவிடுவேன் என்ற பிணைய பத்திரம் (Indemnity Bond) எழுதிக் கொடுக்க வேண்டும் (அரசு கடித எண்.21396/ஓய்வூதியம்/91-2 நிதித்துறை நாள் 09.04.91). இந்த விதிகள் உள்ளாட்சி நிறுவனங்கள், உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும் பொருந்தும் (அரசு ஆணை எண்.478 நிதி (ஓய்வூதியம்) நாள் : 4.6.1987).

திருமணம் ஆகாத / விதவை மகள்களுக்கு: ஓய்வூதியர்களின் / குடும்ப ஓய்வூதியர்களின் திருமணமாகாத / விதவை / விவாகரத்தான மகளுக்கு, அவர்கள் 25 வயதை கடந்த பிறகும் குடும்ப ஓய்வூதியம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது (அரசாணை எண்.325 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் : 28.11.2011). இதற்கான விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் துறை அலுவலகம் மூலம் மாநில கணக்காயருக்கு அனுப்பி குடும்ப ஓய்வூதிய ஆணை பெற வேண்டும் (அரசாணை எண்.165 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் : 28.5.2012). இவ்வகை குடும்ப ஓய்வூதியர்களுக்கு அடிப்படை ஓய்வூதியம் 30.09.2017 வரை ரூ.3,050/- வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் (அரசாணை எண்.29 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் : 31.01.2013). 1.10.2017 முதல் அடிப்படை ஓய்வூதியம் ரூ.7850/-. இவ்வகை குடும்ப ஓய்வூதியாரர்கள் ஆண்டுதோறும் திருமணம்/மறுமணம் புரியாமை சான்றிதழ் ஓய்வூதியம் வழங்கும் அலுவலரிடம் வழங்க வேண்டும். ஆண்டுதோறும் வருமான சான்றிதழ் ஓய்வூதியம் பெற மனு அளிப்பவர்களுக்கான மாத வருமானம் ரூ.2550/- மட்டுமே இருக்க வேண்டும் என்பதை மாற்றி ரூ.7850/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது (அரசாணை எண்.337 நிதித் (ஊதியக்குழு) துறைநாள் 14.11.17).

மூன்றாம் பாலினத்தவருக்கு குடும்ப ஓய்வூதியம்: அரசு ஊழியர்களின் / ஓய்வூதியர்களின் மூன்றாம் பாலின (திருநங்கை / திருநம்பி / அரவாணி) குழந்தைகளை பெண் குழந்தைகளாகக் கருதி குடும்ப ஓய்வூதியம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. அவர்களுக்கு 25 வயதுக்குப் பிறகும் திருமணமாகாத / விதவை மகள்களுக்குரிய நிபந்தனைகளின் அடிப்படையில் குடும்ப ஓய்வூதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த குடும்ப ஓய்வூதியம் அரசாணை தேதியான 20.06.2017 முதல் அமலுக்கு வந்துள்ளது (அரசு நிலையாணை எண்.180 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள் : 20.06.2017).

ராணுவத்தினரின் குடும்பத்திற்கு இரண்டு குடும்ப ஓய்வூதியம்: ராணுவத்தில் பணியாற்றி ஓய்வூதியத்துடன் படைப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், குடிமைப் பணியில் தமிழகத்தில் மறுவேலைவாய்ப்புப் பெற்று, குடிமைப்பணிக்கான ஓய்வூதியமும் பெற்று உயிர்நீத்த முன்னாள் ராணுவத்தினரின் மனைவிக்கு / வாரிதாருக்கு ராணுவக் குடும்ப

ஓய்வூதியத்துடன், மாநில அரசின் குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்படும் (அரசு நிலையாணை எண்.290 பொதுத் (முன்னாள் ராணுவத்தினர்) துறை நாள் : 05.04.2017). இந்த குடும்ப ஓய்வூதியம் 02.09.2016 முதல் அமலுக்கு வரும் வகையில் ஆணையிடப்பட்டுள்ளது.

தற்காலிக ஓய்வூதியம் / பணிக்கொடை (Provisional Pension / Gratuity - TNP Rule 60) குற்றச்சாட்டு நிலுவையிலிருக்கும் நபர், ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு குந்தகம் இன்றி ஓய்வுபெற அனுமதிக்கப்படும்போதும் நிர்வாக காரணங்களால் ஓய்வூதியம் வழங்குவதில் தாமதமேற்படும்போதும், தகுதி பெற்ற அலுவலர் (Pension Sanctioning Authority) ஓய்வூதிய முன்மொழிவுகளை மாநில கணக்காயருக்கு அனுப்பும் அலுவலர் தற்காலிக ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஒப்பளிப்பு செய்து வழங்கலாம். (A) 100 சதவீதம் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்கப்படும் (பட்டியல் வரைவு அலுவலர்களுக்கு 80 சதவீதம் பணிக்கொடை மட்டுமே). (B) புரோவிஷனல் பென்ஷனுக்கு அகவிலைப்படியும் வழங்கப்படும் (அரசாணை எண்.575 நிதித்துறை நாள் 07.07.94 மற்றும் அரசு க.எண்.3579 நிதி (ஓய்வூதியம்) துறை 95-1 நாள்.24.04.95). (C) 1.4.95 முதல் புரவிஷனல் பென்ஷன் பெறுபவர்களுக்கு மருத்துவப்படி வழங்கப்படுகிறது (அரசு ஆணை எண்.326 நிதி நாள் 24.04.95). (D) புரவிஷனஸ் பென்ஷன் பெறுபவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பொருந்தும்.

IV. **வாழ்நாள் நிலுவைத் தொகை (Life Time Arrears)** ஓய்வூதியர் இறக்கும் நாள் வரை வழங்கப்படாத மாதாந்திர ஓய்வூதியம் அகவிலைப்படி நிலுவைத் தொகை உரிய ஓய்வூதிய மறு நிர்ணயம் செய்து அளிக்கப்படாத நிலுவைத் தொகை, ஆகியவை ஓய்வூதியருக்குரிய வாழ்நாள் நிலுவை ஓய்வூதியம் ஆகும். இது இறந்த ஓய்வூதியரின் குடும்பத்திற்கு வழங்கப்பட வேண்டும். இணை ஓய்வூதிய ஆணையில் (Joint P.P.O) கணவர்/ மனைவி பெயர் இருக்கும் போது, உரியவர் இறப்புச் சான்று மட்டும் அளித்து, குடும்ப ஓய்வூதியத்துடன் வாழ்நாள் நிலுவை ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம். வாரிசு சான்று தேவையில்லை. கணவர்/ மனைவி இல்லாத நேர்வுகளில் வாரிசுதாரர் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கனவே ஓய்வூதியர் வாழ்நாள் நிலுவை ஓய்வூதியம் பெற உரிய படிவத்தில் நியமனம் அளித்திருந்தால் யார் பெயருக்கு அளிக்கப்பட்டத்துள்ளதோ அவர் பெற்றுக்கொள்ளலாம். நியமனப்படிவம் அளிக்கப்படாத சூழலில், வாரிசுதாரர்கள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும் (அல்லது பிற வாரிசுதாரர்களிடம் இருந்து தடைஇன்மை சான்று பெற்று ஒரு வாரிசுதாரரே பெற்றுக்கொள்ளலாம்).

V. **ஓய்வூதியம் நிர்ணயம் / கணக்கீடு** (A) ஓய்வூதியம் பெறுவதற்கு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணிமுடித்திருக்க வேண்டும். முழு ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்காலம் 30 வருடங்கள் ஆகும். கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாத சராசரி ஊதியத்தில் 50 சதவீதம். இதில் எது அதிகமோ அது அடிப்படை ஓய்வூதியமாக வழங்கப்படும் (TNP Rule 43 (2A). 30.06.96 வரை ஓய்வுபெற்றவர்களுக்கு முழு ஓய்வூதியத்திற்கான பணிக்காலம் 30 ஆண்டுகளாக ஆணையிடப்பட்டது (அரசாணை எண்.245 நிதித் (பிசி1) துறை நாள்: 19.07.2018). உச்சநீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முழு ஓய்வூதியம் பெற தேவையான பணிக்காலம் 33 ஆண்டுகளுக்குப் பதிலாக 30 ஆண்டுகள் போதும் என்ற அரசாணை எண்:245 நிதி (பிசி1) துறை நாள் 19.7.2018இல், 01.07.96க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகையை 01.10.1979 முதல் 01.07.1996 வரை ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கும் நீட்டித்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி ஓய்வூதியம், குடும்ப

ஓய்வூதியத்தினை உரியவர்களுக்கு மாற்றி அமைத்து நிலுவைத் தொகைகளைப் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள், அரசாணையில் இணைக்கள்த படிவத்தில் ஓய்வூதியர்கள் பணியாற்றிய அலுவலகம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

முழு ஓய்வூதியத்திற்கு தகுதியான காலத்தை 60 அரைஆண்டுகளாக எடுத்துக்கொண்டு 30 வருடங்களுக்கு குறைவாக பணியாற்றியவர்களுக்கு அவர்கள் பணியாற்றிய அரைஆண்டுகள் எண்ணிக்கை அடிப்படையில் ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படுகிறது. மைய அரசில் பணிபுரிந்து மாநில அரசு பணிக்கு வந்தவர்களுக்கு இரண்டு பணிக்காலமும் ஓய்வூதியக் கணக்கீட்டிற்கு சேர்க்கப்படும் (அரசாணை எண்:39 நிதித்துறை நாள் 13.01.95). தமிழக அரசு பணியிலிருந்து உள்ளாட்சி பணிக்கு மாறிச்சென்றால் இரண்டு பணிக்காலமும் ஓய்வூதியத்திற்கு சேரும் (ஓய்வூதியவிதி 12(5)). ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்து பின்னர் கல்வித்துறையிலும், பிற துறைகளிலும் பணியாற்றியவர்களுக்கு இரண்டு பணிக்காலமும் ஓய்வூதியக் கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும் (அரசாணை எண்.1559 கல்வித்துறை நாள் : 18.08.83 மற்றும் 274 பொது சுகாதாரத்துறை நாள் 08.11.73). பணி முறிவுக்காலம் ஓய்வூதியத்திற்கு கணக்கிடப்பட மாட்டாது (ஓய்வூதிய விதி எண்.11).

(C) 1.1.1986 க்குப் பிறகு 3 மாதங்களும் அதற்கு மேலும் ஒரு அரைஆண்டாகவும் 9 மாதங்களும் அதற்கு மேலும் இரண்டு அரைஆண்டுகளாகவும் எடுத்துக்கொள்ளலாம் (அரசாணை 24 நிதித்துறை (ஓ) - 21.1.86). (D) தற்காலிக பணிக்காலம் ஓய்வூதியக் கணக்கீட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படும். 2.4.2003க்கு முன் பதவி உயர்வு பெற்ற முறையான ஊதியப்பணிக்கு கொண்டுவரப்பட்ட சில்லறைச் செலவின/ மதிப்பூதிய/ தொகுப்பூதிய ஊழியர்களுக்கு முந்தைய பணிக்காலத்தில் பாதியை ஓய்வூதியத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் (அரசாணை 408 நிதித் (ஓய்வூதிய) துறை நாள்.25.08.2009). (E) மருத்துவச் சான்றின் பேரில் சம்பளமில்லா விடுப்பில் சென்ற காலமும் ஓய்வூதியக் கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். (F) அடிப்படை ஊதியம் (Basic pay), தனி ஊதியம் (Personal Pay), அகவிலை ஊதியம் (Dearness pay) ஆகியவை ஓய்வூதியம் கணக்கிட எடுத்துக்கொள்ளப்படும். (G) ஓய்வூதியக் கணக்கீட்டுத் தொகை பைசாவாக வந்தால் அடுத்த ரூபாய்க்கு ஓய்வூதியம் கணக்கிடப்படும் (31.12.2015 வரை). (H) 01.01.2016 முதல் ஓய்வூதியக் கணக்கீட்டுத் தொகையின் அடுத்த 10 ரூபாயில் ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படும்.

VIII. **பணி ஓய்வு நாளுக்கு மறு நாள் ஆண்டு ஊதிய உயர்வு ஒப்பளிப்பு** TNGPA உள்ளிட்ட பல அமைப்புகளும் தனி நபர்களும் தொடுத்த வழக்குகளில் சாதகமான தீர்ப்புகள் அளிக்கப்பட்ட பின்பு தமிழக அரசு, 31.12.2014 அன்றும் அதற்குப் பின்னரும் பணி ஓய்வு பெறுபவர்களுக்கு மட்டும் அவர்கள் ஆண்டு ஊதிய உயர்வு நாளுக்கு முதல் நாள் ஓய்வு பெற்றிருந்தால் அவர்களது ஓராண்டு பணிக்காலத்தைக் கணக்கில் கொண்டு கருத்தியலான ஒரு ஊதிய உயர்வு அளித்து அதன்அடிப்படையில் ஓய்வூதியப் பலன்களை கூடுதலாகப் பெற அரசாணை எண்.311 நிதித் (CPCM) துறை நாள்: 31.12.2014இல் ஆணையிடப்பட்டது (FR26/A). தன் விருப்ப ஓய்வில் செல்லும் அரசு ஊழியர்களுக்கு இது பொருந்தாது (அரசு கடிதம் எண்.23096/வே.நி.1/2019-4 நாள்:11.02.2020). விதித்திருத்தம் அரசாணை நிலை எண்.98 மனிதவள மேலாண்மை துறை (FRII) நாள்:21.09.2021.

31.12.2014க்கு முன் ஓய்வுபெற்ற பலருக்கும் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பை அமலாக்க TNGPA தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் வாதத்தில் அரசு வழக்கறிஞர் நீதி அரசர் முன் கொடுத்த வாக்குறுதியின்படி அரசாணை 140, நிதித் (ஊதியக்குழு) துறை 25.04.2018

வெளியிடப்பட்டது. இந்த அரசாணையின்படி 31.12.2014க்கு முன் ஆண்டு ஊதிய உயர்வு நாளுக்கு முன் ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் கருத்தியலில் ஆன ஒரு ஊதிய உயர்வு வழங்கி அதன்படி ஓய்வூதியத்தை கூடுதலாகப் பெறலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது. இது அரசாணை எண்.311, 31.12.2014க்கு முன் ஓய்வு பெற்றவர்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டு, பணப்பலன்கள் 31.12.2004 முதற்கொண்டே வழங்கப்படும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

IX. மேலும் அரசு கடிதம் எண்.8730/ FR-1/2018-1 பணியாளர் மற்றும் நிர்வாகம் சீர்திருத்தத்துறை நாள் 13.01.2018 பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஓய்வுபெறும் அண்மைக் காலத்தில் ஒருவருக்கு பதவி உயர்வு வரப்பெற்றிருந்தால் அவரது கீழ்நிலைப் பதவியின் ஆண்டு ஊதிய உயர்வு ஓய்வு பெறும் நாளுக்கு முதல் நாள் வரும் நேர்வுகளில் அவர்களது பதவி உயர்வுக்குரிய ஊதியத்தை ஓய்வுபெறும் நாளில் நிர்ணயிக்க விருப்பம் தெரிவிக்க அனுமதித்துள்ளது. இவ்வாறான ஊதிய நிர்ணய விருப்பம் அளிப்பதற்கு எவ்வித காலக்கெடுவும் கிடையாது என்று அரசு க.எண்.8742/FRI 2020-1 ப & நி.சீ.த்துறை நாள்:15.06.2020இல் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் பணி ஓய்வு நாளில் கீழ்நிலைப் பதவியில் ஒரு ஊதிய உயர்வைப் பெற்றுக்கொண்டு பின்னர் பதவி உயர்வுக்குரிய ஊதியத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம். அதன்அடிப்படையில் ஓய்வூதியம் பெறலாம்.

X. 80வயதுக்கு மேற்பட்டோருக்கு கூடுதல் ஓய்வூதியம் 80 வயது நிரம்பிய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் (1.1.2011 முதல்) கீழ்கண்டவாறு வழங்கிட அரசு ஆணையிட்டது (அரசாணை எண்: 42 நிதி (ஓய்வூதிய)த்துறை, நாள் 7.2.2011 மற்றும் அரசாணை எண்.313 நிதி (ஊதியக்குழு) துறை நாள் : 25.10.2017-பத்தி 20).

வ.எண்.	**ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு**	**கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்**
1	80 முதல் 84 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20 சதவீதம்
2	85 முதல் 89 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30 சதவீதம்
3	90 முதல் 94 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40 சதவீதம்
4	95 முதல் 99 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50 சதவீதம்
5	100 மற்றும் அதற்கு மேல்	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100 சதவீதம்

கூடுதல் ஓய்வூதியம் கணக்கிடும்போது பின்னத்தொகையை அடுத்த 10 ரூபாய்க்கு நிர்ணயம் செய்ய வேண்டும் (அ.பி.எண்.313 நிதி ஓய்வூதியம் ஓய்வூதிய விதி 49 துணை விதி 3H).

பொங்கல் பண்டிகை, 2024 - 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள் / அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்குதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

படிக்கப்பட்டது :-

1. அரசாணை நிலை எண்.374, நிதி (ஓய்வூதியம்) துறை நாள் : 26.12.2022
2. அரசாணை நிலை எண்.7, நிதி (படிகள்) துறை நாள் : 05.01.2024

ஆணை

1. 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வு பெற்ற 'C' மற்றும் 'D' பிரிவு ஊதிய வீதங்களில் (சாதாரண நிலை இந்த அரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது) மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள். முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து 'C' மற்றும் 'D' பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்துவகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad-hoc Pensioners of all categories) (அதாவது 01.10.2017 முதல் சிறப்பு ஓய்வூதியமாக ரூ.2,000/- பெறும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், குறுஅங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள், ஊராட்சி செயலர், கிராம நூலகர்கள், பெருக்குபவர் / துப்புரவுப் பணியாளர்கள் / துப்புரவாளர்கள், தோட்டக் காவலர், வேட்டைத் தடுப்புக் காவலர், காவல் நிலைய துப்புரவாளர்கள் மற்றும் ஆயா உட்பட) மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்த பணியாளர் பிரிவில் ஓய்வு பெற்றிருந்தாலும் / பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும் ஒட்டு மொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.500/- (ரூபாய் ஐந்நூறு மட்டும்) இவர்களுக்கு வழங்க அரசு ஆணையிடுகிறது.
2. இவ்வானை தற்காலிக ஓய்வூதியம் பெறும் அனைத்து 'C' மற்றும் 'D' பிரிவு ஓய்வுதியதாரர்களுக்கும் பொருந்தும். இந்த பொங்கல் பரிசுத்தொகை, 05.01.2024 நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.
3. 01.10.2022 வரையிலான கால அளவில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள / பணியிலிருக்கையில் இறந்துவிட்டவர்களைப் பொறுத்தவரையில் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்டுள்ள அரசாணையின்படி அவர்களுக்கு தற்காலிக மிகை ஊதியம் வழங்கப்பட்டிருக்குமேயானால், அவர்கள் இந்தப் பொங்கல் பரிசுத்தொகையை பெற தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள். இதற்காக, இந்த ஓய்வூதியதாரர்களுக்குத் தொகை வழங்குவதற்குமுன், சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து தொகை வழங்கப்படவில்லை என்பது குறித்த சான்றிதழைப் பெறுமாறு ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
4. இந்த ஆணை பின்வரும் வகையிலான ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தாது :- (A)

உலேமா உதவித் தொகைகள், மாநில சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான உதவித் தொகை பெறுபவர்கள் புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித் தொகைகள் பெறும் சிறப்பு ஓய்வூதியதாரர்கள். (B) பணியில் இருக்கும் பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடியவையான தற்காலிக மிகை ஊதியம் (Ad-hoc Bonus of all categories) / சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் (Special Ad-hoc Bonus) பெறுகின்ற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப ஓய்வூதியதாரர்கள். (C) 'A' மற்றும் 'B' பிரிவு பதவிகளிலிருந்து ஓய்வுபெற்ற அனைத்து அரசு ஓய்வூதியதாரர்கள். அகிலஇந்தியப் பணி அலுவலர்கள். பல்கலைக்கழக மானியக் குழு / அகிலஇந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிமைக் கழகம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் உட்பட.

5. ஓய்வுதிய முன்னோடித் திட்டத்தின் (Pension Pilot Scheme) கீழ் வரும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில், பொங்கல் பரிசுத் தொகை வழங்குவதற்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது :- (i) அரசுச் செலவில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பணவிடை மூலம் அனுப்பப்படுவதைப் பொறுத்தமட்டில் இந்தப் பொங்கல் பரிசுத் தொகையும் அரசுச் செலவில் பணவிடை மூலம் அனுப்பப்படவேண்டும். (ii) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தை வங்கிகள் மூலம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில்: (A) பட்டியலுக்குத் தொகை அளிக்க காசோலை / மின்னணு தீர்வு முறையினை (ECS) பின்பற்றும் சென்னை ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார்நிலை கருவூலங்களில், காசோலைகள் வெளியிட்டு அவற்றை தொகை செலுத்தும் சம்பந்தப்பட்ட வங்கிச் கிளைகளுக்கு அனுப்ப சென்னை ஓய்வூதியம் வழங்கும் அலுவலருக்கும் மாவட்ட கருவூலங்கள் மற்றும் சார்நிலைக்கருவூலங்களின் அலுவலர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. அந்த காசோலைகளுடன் ஓய்வூதியதாரர்கள் குடும்ப ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதிதார்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும். (B) பட்டியலுக்கு தொகை அளிக்க காசோலை/ மின்னணு தீர்வு முறை இல்லாத வங்கி சார்ந்த சார்பு கருவூலங்களில் வங்கி கணக்கு காசோலை வங்கி வரைவு காசோலை எடுத்து அவற்றை ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் சேமிப்பு வங்கிக் கணக்கில் வரவு வைப்பதற்காக சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் வங்கிச் கிளைகளுக்கு அவற்றை அனுப்பி வைக்க சார்நிலை கருவூல அலுவலர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6. மாநிலத் தொகுப்பு நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்குதல் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில் இந்த செலவு கீழ்க்கண்டுள்ள கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

2071 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் 01 சிவில் - 800 ஏனைய செலவு - மாநில செலவினங்கள் - பொங்கல் பரிசு - 327 ஓய்வூதியங்கள் - 09 ஏனையவை IFHRMS : (த.தொ.கு.2071 01 800 AK 32709)

7. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் கணக்கு வைத்துவரப்படும் நிதி அல்லது நகராட்சி நிதிகளிலிருந்து ஓய்வூதியம் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான உள்ளாட்சி மன்றங்களின் 'C' மற்றும் 'D'பிரிவு பணியாளர்களாக ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமாட்டில் இந்த செலவு அத்தகைய நிதிகளிலிருந்து செய்யப்பட்ட வேண்டும். சிறப்பு ஓய்வூதியம் பெறும் சத்துணவு அமைப்பாளர்கள் அங்கன்வாடி பணியாளர்கள் குறு அங்கன்வாடி பணியாளர்கள் சத்துணவு சமையலர்கள் சமையல் உதவியாளர்கள் அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகியோர்களை பொறுத்தவரை சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்கும் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/ குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் பத்தி 6ல் உள்ள கணக்குத் தலைப்பின் கீழ் இச்செலவினைப் பற்று வைக்க வேண்டும்.
8. மேலே அனுமதிக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகையை ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம பணியமைப்பு அலுவலர்களுக்கு உடனடியாக பெற்று வழங்க அறிவுறுத்தப்படுகிறது.
9. 2023 - 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் போதிய நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.இளங்கோவன்

அரசு முதன்மைச் செயலாளர்